யாழ்ப்பாண பொது நூலகம்



# முரசொலி

பக்கங்கள் நான்கு

விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 258 ஆங்கீரச ஆவணி 04 ( 20 . 08 . 1992 ) வியாழன்


## இரணைதீவு கடலில் கப்பல்கள் 235 குடும்பங்கள் இடம்பெயர்வு

இரணைதீவு கடற்பரப்பில் தொடர்ந்து ஒரு வாரங்களுக்கு மேலாக தரித்து நிற்கும் கடற்படையின் கப்பலும் இக் கடல் பரப்பில் நடமாடும் கடற்படையினரின் இரா படகுகளையும் கண்டு இக்கிராமத்து 235 குடும்பங்கள் இடம் பெயர்ந்து நாச்சிக்குடா கரையோரப்பகுதிகளிலும், தேவாலயம், பாடசாலை என்பவற்றிலும் தங்கியுள்ளனர். இரணைதீவில் இருந்து 12 மைல் தூரமான கடலினை படகுகள் மூலம் தாண்டி நாச்சிக்குடா பகுதிகளுக்கு கடந்த 9 ஆம் 10 ஆம் 11 ஆம் 12 ஆம் திகதிகள் வரை வந்தடைந்த வண்ணம் இருந்தனர். இம் மக்களுக்கு இலவச உலர் உணவு பொருள்களை ஓஸாம் நிறுவனமும் செஞ்சிலுவைச் சங்கமும் வழங்கி வருகின்றனர் — 4 ஆம் பக்கம் பார்க்க

# யுத்த வரிச்சுமைகளை ஏற்குமாறு சபையில் அமைச்சர் கோரிக்கை!

## யுத்தம் புரிவதற்கு வெளிநாட்டு நிதியை எதிர்பார்க்க முடியாதாம்

வடக்கு கிழக்கில் யுத்தம் தீரும்வரை அதனை முன்கொண்டு செல்வதற்கு போதிய பணம் தேவைப்படுகிறது இதனால் புதிய சுமைகளை அரசும் பொதுமக்களும் ஏற்றாக வேண்டும்.

இவ்வாறு எரிபொருள், மின்சக்தி அமைச்சர் சந்திரா பண்டார நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

வடக்கு கிழக்கில் யுத்தம் புரிவதற்கு நம் வெளிநாட்டு நிதி உதவிகளை எதிர்பார்க்க முடியாது எனவும் அவர் கூறினார்.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் பிரதமரும், நிதி அமைச்சருமான டி. பி விஜேதுங்க மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் பிரமாணங்கள் சிலவற்றை சபையில் சமர்ப்பித்தார்,

வடக்கு கிழக்கு யுத்த நிலைமையாலும் அதின் செலவுக்கு அதிக பணம் தேவைப்படுகிறது

இதனால் மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இப்பணத்தைப் பெறவேண்டியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்

ஏற்கனவே பாதுகாப்பு வரியாக மூன்று வீதம் வரி மக்களிடம் இருந்து அறவிடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## பாஷையூர் கடற்கரையில் மிதிவெடியில் சிக்கியவர் பாதத்தை இழந்தார்

பாஷையூர் மகேந்திரபுரம் சேர்ந்த ஜேசுதாசன் எனும் நவம் (28) என்ற இளைஞர் பாஷையூர் கரையோரப்பகுதியில் மிதிவெடியில் சிக்கி ஒரு காலின் பாதத்தை இழந்துள்ளார் இவரது மறு காலும் சிதைவுற்ற நிலையில் உள்ளது.

நேற்று அதிகாலை கடற்றொழில் செய்தபின்னர் இக்கரையோரப் பகுதிக்கு வந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

தீவுப்பகுதியில் படையினரால் வைக்கப்பட்ட மிதிவெடி பாஷையூர் கரையோரப்பகுதியில் ஒதுங்கியதையடுத்தே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது 07

## மண்டைதீவில் இருந்து தொடரும் தாக்குதல்கள்

மண்டைதீவுச் சந்தி, மண்கும்பான் ஆகிய இடங்களிலிருந்து நேற்று முன்தினமும் நேற்றுப் பகலும் இராணுவத்தினர் யாழ் நகரின் கடற்கரையோரங்களை நோக்கி தொடர்ந்து ஷெல், கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டனர்,

ஷெல், கலிபர் ரவைகள் சில சிறுத்தீவுக் கரையோரமாக விழுந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது அதே சமயம் மண்டைதீவுச் சந்தியில் இராணுவத்தினர் புதிய காவலரண்களை அமைத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலையும் மண்டைதீவில் இருந்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது 15,7 47

## பூநகரியில் இருந்து தாக்குதல்

பூநகரி - கல்முனைப் பகுதியில் உள்ள இராணுவத்தினரும் நேற்று முன்தினம் பகல் கரையோரப் பகுதிகளை நோக்கி கலிபர் தாக்குதல்களையும், ஷெல் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்

## ஹெலி நோட்டம்

இளவாலை, கீரிமலை, பண்டத்தரிப்பு, மாதகல், விளான் அளவெட்டி பகுதிகளை நேற்று மாலை ஹெலிகப்டர் ஒன்று பலதடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது

## காரைநகரில் இருந்து ஷெல் வீச்சு

காரைநகர் இராணுவமுகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு 10. 30 மணியளவில் பொன்னாலை பகுதியை நோக்கி கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது 47

## உப ஜனாதிபதியாக நாராயணன் தெரிவு

இந்தியாவின் அடுத்த உப ஜனாதிபதியாக கே. ஆர். நாராயணன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதற்கான தேர்தலில் 768 எம். பிகளில் 711பேர் நாடாளுமன்றத்தில் வாக்களித்தனர்

இதில் 10வாக்குகள் செல்லுபடியற்றதாக அறிவிக்கப்பட்டது. கே. ஆர். நாராயணனுக்கு 700வாக்குகளும் இவரை எதிர்த்து போட்டியிட்ட சுயேட்சை வேட்பாளர் ஜெ கிந்தர்சிங்கிற்கு ஒரேயொரு வாக்கும் கிடைத்தது

நாராயணனுக்கு அனைத்து கட்சிகளும் ஆதரவு அளித்ததும் தெரிந்ததே

## வெளிநாட்டு செய்தியாளர் கொப்பேகடுவ மரணம் குறித்து மக்கள் சந்தேகம்

லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உள்ளிட்ட உயர் இராணுவ அதிகாரிகள் குழு சந்தியாக மரணமடைந்தது சம்பந்தமாக இன்று மக்கள் சந்தேகத்துடன் கேள்வி எழுப்புகின்றனர் என சிறீலங்கா வெளிநாட்டு செய்தியாளர் சங்கத்தைச்சேர்ந்த லுசியன ராஜகருணா கூறினார்

நேற்று புதிய நகர மண்டபத்தில் சுதந்திர மக்கள் தொடர்பு சாதன செய்தியாளர்களின் கூட்ட மொன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்

ஐலண்ட் பத்திரிகையின் இணை ஆசிரியர் அஜித் சமரநாயக்க பேசும்போது 1977க்கு பின்பு செய்தியாளர்கள்


... 4 ஆம் பக்கம் பார்க்க


## பொலிஸில் புகார் செய்த பின்பும் கத்தியால் குத்தி தாக்குதல்

அத்த பத்திரிகையின் கேலிச் சித்திரக்காரர் ஹிவ்றி யூனூஸ் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து செய்தியாளர்களின் ஆவேசங்கள் வலுவடைந்துள்ளன.

ஜனாதிபதி சம்பந்தமான கேலிச் சித்திரமொன்றை வரைந்ததற்காக இருபதுபேர் கொண்ட ஆயுதமேந்திய குழு சென்று அவரது இல்லத்துக்கு சென்று அவரைத் தாக்கியுள்ளது

இது சம்பந்தமாக அவர் பொலிசில் புகார் செய்ததுடன் அவரைத் தாக்கியவர்களில் ஒருவரை அடையாளமும் கண்டுள்ளார்

ஹிவ்றி யூனூஸ் பொலிஸில்


... 4 ஆம் பக்கம் பார்க்க


## 'பாராளுமன்றம் கனத்தையல்ல!' உறுப்பினர்க்குசபாநாயகர்எச்சரிக்கை

"பாராளுமன்றம் கனத்தையல்ல"

இப்படி சபை எம் பிக்களை எச்சரித்தார் சபாநாயகர் மொஹமட்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் நிகழ்ந்தது. பாராளுமன்ற அமர்வின் போது எதிரணி உறுப்பினர்கள் கூச்சல் போட்ட வேளையிலேயே சற்றுக் கடுமையான குரலில் இப்படிச் சொன்னார் சபாநாயகர்.

## 'அத்த' பத்திரிகை ஆசிரியரை கொலல கொழும்பில் முயற்சி!

கொழும்பில் 'அத்த' என்ற இடதுசாரி சிங்களப் பத்திரிகையின் ஆசிரியர் கொலை முயற்சியொன்றிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பியுள்ளதாக ஏஜென்ஸி செய்தியொன்று தெரிவிக்கிறது.

'அத்த' பத்திரிகை சமீபத்தில் ஜனாதிபதியை நையாண்டி செய்து கேலிச் சித்திரமொன்றைப் பிரசுரித்திருந்தது.

நேற்று முன்தினம் மேற்படி பத்திரிகை ஆசிரியர் ஜிபிரிலூஷியன் 'வீட்டுக்குச் சென்ற ஆயுதம் தாங்கிய கும்பலொன்று அவரின் வீட்டைத் தாக்கி, அவரைக் கொலை முயன்றதாகவும், தெரிவிக்கப்படுகிறது

அச் சமயம் ஜிபிரிலூஷியன் வீட்டிலிருக்கவில்லை யெனவும்தொடர்ந்தும்கேலிச்சித்திரம் பிரசுரிக்கப்படடால் அவர் கொலை செய்யப்படுவரர் என அக் கும்பல் அச் சமயம் வீட்டிலிருந்தோரை எச்சரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## 300க்கும்மேற்பட்ட பத்திரிகையாளர் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவதை கண்டித்துநேற்று கொழும்பில் 300க்கும் அதிகமான உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் ஆர்ப்பாட்டபோராட்டம் ஒன்றை நடத்தினர்

பொலிஸார் அதிகமாக நிறுத்தப்பட்டிருந்தபோதும் அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறவில்லை என செய்திகள் தெரிவித்தன

நகரின்பல பகுதிகளில் அரச எதிர்ப்பு சுலோகஅட்டைகள் தொங்கவிடப்பட்டன அரசின் காடைத்தனத்தை கண்டிக்கிறோம் செய்திச் சுதந்திரம் வேண்டும் என்ற வாசகங்களும் காணப்பட்டன.

சண்டே ஐலண்ட் பத்திரிகையைச்சேர்ந்த காமினி வீரக்கோன் பி. பி. ஸிக்கு தகவல் அளிக்கையில், "கடந்த 20 ஆண்டுகளாக செய்தித்தணிக்கை, அவசரகாலச் சட்டம் போன்ற நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு வந்த பத்திரிகையாளர்கள் இப்போது விழி புணர்வு பெற்றதே மகத்தான சாதனை" என்றார்

அத்த எனும் சிங்களப் பத்


... 4 ஆம் பக்கம் பார்க்க


காடு நகரமானால்
நாடு நரகமாகும்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 18 வருடம் காணா கடும் வறட்சி!

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடுமையான வறட்சி தற்பொழுது காணப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 18 வருடகாலத்தில் காணாத கடும் வறட்சி அங்கு தற்பொழுது நிலவுகிறது.

இதனால் கால்நடைகள் குடிக்க நீரின்றி பெருமளவில் அங்கு இறந்து வருகின்றன.

நீண்டகாலமாக மழை பெய்யாமை, கச்சான்காற்று பலமாக வீசுதல் ஆகிய சூழ்நிலைகள் இந்த கடும் வெப்ப கால நிலைக்கான காரணிகளாக அமைந்துள்ளன.

## பரமேஸ்வரி அம்மன் கும்பாபிஷேகம்

பருத்தித்துறை அருள்மிகு ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி அம்பன் கோவில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் அடுத்த மாதம் 9 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது. (10)

## வீதிகளில் பாண் விற்பது தடை செய்யப்பட்டுள்ளது

பாணினது தரம், விலை, விநியோகம் ஆகியவற்றில் காணப்படும் சீரின்மையை நிவர்த்தி செய்யும் முகமாக சகல பாண் உற்பத்தியாளர்களும் இம் மாதம் 12 ஆம் திகதியன்று தமிழீழ விடுதலைப் புலிகளது யாழ். மாவட்ட செயலகத்தில் ஒன்று கூடி பின்வரும் முடிவுகளை ஏகமனதாக எடுத்தனர்.

இம் முடிவுகள் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க நிர்வாக சபையினால் 17 ஆம் திகதியன்று உறுதி செய்யப்பட்டது.

இத் தீர்மானங்கள் பின்வருமாறு:-

சகல பாண் உற்பத்தியாளர்களும் யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தில் அங்கத்துவம் பெறல் வேண்டும். அங்கத்துவம் பெறாதோர் இயங்குவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் புதிய பேக்கரிகள் அமைக்கப்படுவதாயின் உறுப்புரிமை பெற்று முன் அனுமதி பெறல் வேண்டும்

தேசிய சிறுதானிய உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாகவும், பாணின் போஷாக்கினை அதிகரிக்கும் நோக்குடனும் ஒரு மூடை மாவுக்கு அரைக்கிலோ குரக்கன் மா என்ற விகிதத்தில் கலந்து தயாரிக்கப்படுதல் வேண்டும்.

450 இறாம் தரமான பாணின் சில்லறை விலை ரூபா 7.50 எனத் தீர்மானிக்கப்பட்டது

பாண் உற்பத்தியாளர் விபரம் பாணின் நிறை, விலை ஆகியவற்றைக் கொண்ட யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க அறிவித்தல், பேக்கரி விநியோக வண்டிகள், விற்பனை நிலையங்களிலும் ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும்

சுகாதார விதிமுறைக்கேற்ப மூடப்பட்ட பெட்டிகளிலேயே பாண் விநியோகம் செய்யப்படல் வேண்டும். கடைகளிலும் மூடப்பட்ட பெட்டிகளிலேயே வைக்கப்படல் வேண்டும்.

தனிப்பட்ட ரீதியாகப் பாணை வீடுகளுக்கு நேரடியாகவோ அல்லது வழி வியாபாரிகள் மூலமாகவோ விநியோகம் செய்யப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது

யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க கண்காணிப்புக் குழு இம் முடிவுகளை அமுல் நடத்தி கண்காணிக்கும். மீறுவோர் மீதான நடவடிக்கைக்கு காவற்றுறையினரின் ஒத்துழைப்பைக் கோருவதென தீர்மானிக்கப்பட்டது.

## படையினருக்கு அபராதம் என்ன? எத்தனை வருட சிறை?

'விடுதலைப்புலிகள் பற்றிய தகவல்களைத் தெரிந்திருந்தும் விடயத்தை படையினருக்கு அறிவிக்கத் தவறிய மைக்கல் வரணியைச் சேர்ந்த ஆதவன் என்ற மாணவருக்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதி மன்ற நீதிபதி எல் என் டி. ஜெயசூரிய 7500 ரூபா அபராதமும் 10 வருடகாலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழியச்சிறைத் தண்டனையும் விதித்துள்ளார் இதே வேளை விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் இருக்கும் இடம் படையினருக்குத் தெரியும் என முன்னர் கூறிய தளபதி ஹமில்டன் வனசிங்கவுக்கும் ஏனைய இராணுவ உயரதிகாரிகளுக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் எவ்வளவு அபராதம்? எத்தனை வருட சிறைத்தண்டனை?'

இப்படிக் கேள்வியெழுப்பியுள்ளது கனடாவிலிருந்து வெளிவரும் 'உலகத்தமிழர்' பத்திரிகை. (16)

## மத்திய கிழக்கு பேச்சுக்களை பகிஷ்கரிக்க ஆலோசனை

இஸ்ரேலுக்கு சுமார் 30 ஆயிரம் கோடி ரூபா கடனை வழங்க அமெரிக்க ஜனாதிபதி புஷ் இணங்கியிருப்பதை அரபு நாடுகள் கண்டித்துள்ளன

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையைக் கண்டித்து அரபு நாடுகள் மத்தியகிழக்கு அமைதிப் பேச்சுக்களை சில காலம் பகிஷ்கரிக்கலாமா என்பது குறித்து ஆலோசித்து வருகின்றன

இது குறித்து அரபு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் டமாஸ்கஸ் நகரில் இன்று கூடி ஆராயவுள்ளனர்.

இஸ்ரேல் பாலஸ்தீன பகுதியில் யூதக் குடியேற்றங்களை நிறுத்துக் கொள்ளுமென உறுதியான உத்தரவாதத்தைத் தராமுன்னரேயே அமெரிக்க ஜனாதிபதி புஷ் இஸ்ரேலுக்கு கடன் வழங்க ஒத்துக் கொண்டுள்ளதாக அரபு நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன.

## தனியார் நிர்வாகத்தில் தோட்டத்தொழிலாளர் அதிருப்தி

45 வயதிற்கு மேற்பட்ட பெண்களை வாய்க்கால் வெட்டும் படி தனியார் வசம் ஒப்படைக்கப்பட்ட தோட்ட நிர்வாகம் பணித்துள்ளதாம்.

இச்சம்பவம் தெகியோவிற்றப் பகுதித் தோட்டமொன்றில் நிகழ்ந்துள்ளதாக முறையிடப்பட்டுள்ளது

இப் புதிய உத்தரவால் தோட்டத் தொழிலாளர்கள் ஆத்திரமடைந்துள்ளனர்.

இப்புதிய தனியார் தோட்ட நிர்வாகம் முன்னைய தோட்டத்துறை நிர்வாகத்தை ஒத்ததாக இருப்பதாகவும் இதனால் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்ட தோட்டங்களின் தொழிலாளர்கள் அதிருப்தி யடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது 14

## மூன்றாம் காலாண்டுக்கான மருந்துகள் விநியோகம்

வலிகாமம் மேற்குப் பகுதியிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு யாழ் சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவினர் இவ்வருட மூன்றாம் காலாண்டுக்கான மருந்து வகைகளை நேரடியாக திணைக்கள லொறி மூலம் கொண்டு சென்று விநியோகித்துள்ளனர்.

சங்கானை அரசினர் வைத்தியசாலை, வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலை, தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகசாலை, பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை, அளவெட்டி அரசினர் வைத்தியசாலை, மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியனவற்றிற்கு மருந்து வகைகள் விநியோகிக்கப்பட்டன. (13)

## இடமாற்றம்

மானிப்பாய் நகர மண்டபத்தில் இயங்கி வந்த தெல்லிப்பழை கூட்டுறவுக் கிராமிய வங்கி தற்போது மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ள கட்டிட மொன்றில் இயங்கி வருகிறது. (22)

## நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவம் 1992

### வாகனங்கள் 3 சிங்கம்

சிங்கம் விலங்குகளின் அரசு மிக்க வலிமையும் ஆளுமையும் துணிவும் உடையது தன்னிலும் உருவால் பெரிய யானையையும் தனது வலி கொண்டு அடக்க வல்லது தாமசகுணத்தை அடக்கி மேலெழும் இராஜச குணத்திற்கு உருவகமாகக் கொள்ளத்தக்கது சிங்கம். சாத்விகமாகிய மிக்க உயர்ந்த குணத்துக்கும் அப்பாலான இறைவன், இராஜசகுணத்தை அடக்கி அதன் மீது அமர்ந்து ஆன்மாக்களுக்கு முக்குணங்களையும் வெல்லற்குரிய ஞானத்தினை வழங்குவது, சிங்கத்தை வாகனமாக்கித் திருவுலாப் போவதைக் குறிக்கின்றது, எனக் கொள்ளலாம்.

"பொதுவாய் இது அம்மையினுடைய வாகனம்; துர்க்கை, காளி, முதலிய சக்திகளுக்கு உரிய வாகனம். பராக்கிரமத்தை இது குறிப்பதாகும். மிருகங்களை அடக்கி ஆள்வது போல் ஆன்மாக்களின் மூர்க்க குணங்களை ஓட்டி அடக்கி ஆண்டு அருள் புரிவதனையும் சிங்க வாகனத்தில் அமர்ந்து சக்தி உருவகப்படுத்துகின்றாள் என்பர்"

ஆணவமும் அறியாமையுமே வடிவாய் அமைந்த மகிஷாசுரனைத் துர்க்காதேவி சிங்கவாகனத்தில் அமர்ந்தே அடக்கி ஒடுக்கி வதைத்தமையால் அவளுக்கு மகிஷாசுரமர்த்தனி என்ற சிறப்புத் திருநாமமும் அமைவதாயிற்று.

(ஆதாரம்: சைவ சமய சிந்தாமணி)

## இன்றைய தெய்வீக இசையரங்கு

சிறிமுருகன் தண்ணீர்ப் பந்தல்

மாலை 6.00 - இரவு 8.00

| பாட்டு | வயலின் | மிருதங்கம் |
|---|---|---|
| யசோதா செல்வராசா | R. S. கேசவமூர்த்தி | K. கண்ணதாசன் |

## சப்பாத்துப் படி அதிகரிப்பு சுற்றுநிருபமும் சிங்களத்திலேயே!

சுகாதார மகளிர் விவகார அமைச்சு குடும்பநல சேவையாளர்களுக்கு (மருத்துவ மாதர்கள்) வழங்கப்பட்டு வரும் சப்பாத்துப் படியை நூறு ரூபாவினால் அதிகரித்துள்ளது.

இதுவரை காலமும் இவர்களுக்கு வருடாந்தம் சப்பாத்துப்படியாக 200 ரூபா வழங்கப்பட்டு வந்தது. கடந்த ஜூலை மாதம் தொடக்கம் இந்தப் படி மூந்நூறு ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள சுகாதார மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் சகல பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகங்களுக்கும் கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ள சுற்றுநிருபம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த சுற்றுநிருபம் தனிச் சிங்கள மொழியில் வெளியிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (13)

## அழம்பில் ஆசிரியர்களுக்கான கஷ்டப் பிரதேசப்படி நிறுத்தம்

அழம்பில் கோத்தணியிலுள்ள பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கஷ்டப்பிரதேச படி ஜூலை மாதம் முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி கோத்தணிப் பாடசாலைகள் அனைத்தும் அண்மையில் மணலாற்றுப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து முள்ளியவளை, தண்ணியூற்று, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களில் தற்காலிகமாக இயங்கிவருகின்றன.

தற்போது பாடசாலைகள் இயங்கும் பகுதிகள் கஷ்டப் பிரதேசமாகக் கணிக்கப்படாததினால் மேற்படி பாடசாலை ஆசிரியர்களுக்கு இக் கொடுப்பனவு தொடர்ந்து வழங்கமுடியாது உள்ளதாம். இப் பாடசாலைகள் பழைய இடங்களில் இயங்கத் தொடங்கியதும் இக் கொடுப்பனவு மீண்டும் வழங்கப்படும் எனக் கல்வித் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. 56

### சென் றோக் ஒன்றில் தோல்வி மற்றையதில் வெற்றி

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்டு வரும் 20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் கரசிப்பிள்ளை விளையாட்டரங்கில் இடம்பெற்ற அரை இறுதி ஆட்டத்தில் குருநகர் சென்.றோக் விளையாட்டுக் கழக அணி பாஷையூர் சென் அந்தனீஸ் விளையாட்டுக் கழக அணியை 2:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து இறுதியாட்டத்தில் ஆடத்தகுதி பெற்றது.

13 வயதிற்கு உட்பட்டவர்கள் ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் அணி சென் றோக் விளையாட்டுக் கழக அணியை 5:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. 16

## ஓய்வூதியம் பெறுவோருக்கு நஷ்டஈடு வழங்க ஆலோசனை

யாழ் மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களின் வீடுகள் இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்திருந்தால் அவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஓய்வூதியம் பெறுபவர்கள் தமக்கு ஏதாவது நஷ்டங்கள் ஏற்பட்டிருப்பின் உடனடியாக அதுபற்றிய விபரங்களை அறிவிக்குமாறு யாழ் அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். 47

### தனியாருக்கு அனுமதியில்லை

தனியார் பல்கலைக்கழகமொன்றை இலங்கையில் அமைக்க அனுமதிக்கப்படமாட்டாது என உயர் கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அமைச்சர் இதனை அறிவித்தார்.

# நாளொன்றுக்கு 20 பேர் இலங்கையில் தற்கொலை!

தற்கொலைச் சம்பவங்களில் உலகில் இலங்கை இரண்டாம் இடம். மாவட்ட ரீதியில் வவுனியா முதலிடம் பற்றிய செய்தியை கடந்த சனிக்கிழமை முரசொலி பத்திரிகையில் பிரசுரித்திருந்தோம் அல்லவா?

அது பற்றிய மேலும் சில தகவல்களை இன்று இங்கு தருகின்றோம்.

இலங்கையில் நடக்கும் 1000 மரணங்களில் 112.7 மரணங்கள் தற்கொலைச் சம்பவங்களாகும். கொழும்பு மாவட்டத்தில் குறைந்தளவு தற்கொலை மரண வீதம் பதிவாகியுள்ளது அதாவது 1000 மரணங்களில் 10.5 மரணங்களே தற்கொலைச் சம்பவங்களாகும்.

இலங்கையில் 1977 இல் 2938 தற்கொலை மரணங்களும், 1987 இல் 7187 தற்கொலை மரணங்களும் சம்பவித்துள்ளன.

ஓய்வுகாலப் பகுதியிலேயே தற்கொலைப் போக்கு மேற்கத்திய நாடுகளில் அதிகரிக்கிறது. இலங்கையில் இதற்கு மாறாக 16 வயது முதல் 30 வயதுக்குட்பட்டவர்களின் தற்கொலைகளே அதிக எண்ணிக்கையாகக் காணப்படுகின்றன.

நாளொன்றுக்கு சராசரி 20 தற்கொலைச் சம்பவங்கள் இலங்கையில் இடம்பெறுகின்றன.

தற்கொலை வீதம் ஒரு பெண்ணுக்கு 3 ஆண்கள் என்ற வகிதமாக உள்ளதை புள்ளிவிபரத்திலிருந்து அறிய முடிகின்றது. (14)

# இராணுவத்தினருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பம்

கொக்கட்டிச் சோலையில் தமிழ் பொதுமக்களை படுகொலை செய்தவர்களென ஆரம்ப விசாரணைகளில் அடையாளம் காணப்பட்ட இராணுவத்தினருக்கு எதிரான விசாரணை இராணுவ நீதிமன்றத்தில் ஆரம்பமாகியுள்ளது.

கொக்கட்டிச் சோலையில் குறித்த படுகொலைகள் இடம்பெற்ற வேளையில் கடமையிலிருந்தவர்களில் 20 இராணுவத்தினர் இந்த நீதிமன்றத்தில் இது குறித்து விசாரிக்கப்படவுள்ளனர்.

படுகொலை, கொள்ளைக் குற்றச் சாட்டுக்களுக்கு உள்ளாகியிருக்கும் இராணுவத்தினருள் சிலர் அதிகாரிகள் தரத்திலானவர்கள்.

# யாழ். வந்து சேவையாற்ற ஒருவர் மட்டுமே விருப்பம்

யாழ் மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலையில் 49 டாக்டர்களுக்கு வெற்றிடம் இருந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த யூலை மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள் மகாநாட்டில் வடக்குப் பகுதியில் டாக்டர்களுக்கு ஏற்பட்ட பற்றாக்குறை பற்றி விவாதிக்கப்பட்டது.

ஆனால் 49 வெற்றிடங்கள் இருக்கும் இவ்வேளையில் யாழ் மாவட்டத்திற்கு சென்று கடமையாற்ற ஒரேஒரு டாக்டர் மட்டுமே விருப்பம் தெரிவித்துள்ளதாக இம் மகாநாட்டில் எடுத்துக் கூறப்பட்டது. 47

# வட-கிழக்கு மாணவர்க்கும் இலவச சீருடை கிடைக்கும்

இலவச சீருடை வடக்கு கிழக்கு மாணவர்களுக்கு வழங்கப்படும் என கல்விச் சேவைகள் அமைச்சர் திருமதி சுனேத்ரா ரணசிங்க தெரிவித்தார்.

'1993 ஜனவரி 18 ஆம் திகதியன்று இலவச சீருடை விநியோகம் ஆரம்பமாகும். அன்றைய தினமே வடக்கு கிழக்கிலும் சீருடை வழங்க நடவடிக்கை எடுக்கிறோம். கப்பல்களில் அவை அனுப்பி வைக்கப்படும்' எனவும் அவர் தெரிவித்தார்.

# கட்சிக்கான நிதியை குறைக்க 37 சு.க. உறுப்பினர் முடிவு

கட்சியின் நிதிக்கு மாதம் தோறும் தங்களுடைய சம்பளத்தில் கழிக்கப்படும் தொகையை அரைவாசியாகக் குறைக்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 37 பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தைக் கேட்டுள்ளனர்.

இந்த முடிவுக்கான பொறுப்பை கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்கா ஏற்றுள்ளதாகவும் இந்த உறுப்பினர்கள் சபை செயலாளரிடம் தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது பாராளுமன்றத்திலுள்ள 67 சு.க. உறுப்பினர்களில் 37 பேரே இக்கோரிக்கையை விடுத்துள்ளனர். சுதந்திரக் கட்சிநிதிக்காக தம்மிடம் மாதா மாதம் சபை செயலாளர் மூலம் அறவிடப்படும் 1000 ரூபாவை 500 ரூபாவாகக் குறைக்குமாறே இவர்கள் கேட்டுள்ளனர்.

சு.க. வின் சிறிலங்கா பத்திரிகைக்கு மாதம் தோறும் தாம் வழங்கும் 500 ரூபா சந்தாவையும் இவ் உறுப்பினர்கள் நிறுத்தியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## மந்திகையில் ஏற்புஊசி இல்லை

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஏற்பு ஊசி இன்மையால் அவசர நோயாளர்கள் பலரும் பெரிதும் அவதியுறுகின்றனர்.

அடுத்துவரும் கப்பலில் மருந்துவகைகளுடன் ஏற்பு ஊசி மருந்து வந்தால் மட்டுமே அவசர நோயாளர்களுக்கு ஏற்பு ஊசி போட்டுக் கொள்ளும் வாய்ப்புக் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தனியான அலுவலகம்

பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்துக்கென தனியான அலுவலகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

மந்திகையில் அமைக்கப்படும் இவ் அலுவலகம் மிக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. 10

# போரை முடிவுக்கு கொண்டுவந்த பின்பு முன்வைக்கும் இனப்பிரச்சினைத் தீர்வை ஜனாதிபதி இப்பொழுது ஏன முன்வைக்கக் கூடாது?

கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றைக் கூட்டிப் பேசிய ஒரு 'ஜனநாயக' தமிழ்க் குழுவின் 'செயலாளர் நாயகம்' டக்ளஸ் தேவானந்தா சில முக்கிய விடயங்களை வெளியிட்டுள்ளார்.

லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவவும் ஏனைய எட்டு இராணுவ உயரதிகாரிகளும் ஊர்காவற்றுறையில் அமுக்க கண்ணிவெடியில் கொலைப்பட்ட விடயத்தில் தென்னிலங்கை சந்தேகம் இவரது குழு மீது கட்டி நின்றதை மறுதலிக்கவே இந்த பத்திரிகையாளர் மாநாடு.

இந்த சந்தேகத்தை மறுதலிக்க வேண்டிய தேவை இவர்களுக்கும் இருந்தது. இவர்களை தம்மோடு இணைத்துக் கொண்ட ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் இருந்தது.

விடுதலைப் புலிகள் தான் இந்தக் குண்டைப் புதைத்தனர் என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தக் குண்டை தாம் புதைக்கவில்லையென்பதை நிரூபிப்பதற்கு மட்டுமல்ல அரசாங்கம் எடுத்த நிலைப்பாட்டை உறுதிப்படுத்த வேண்டிய தேவையும் இவருக்கு இருந்ததும் அதன் காரணமாகவே இந்த நிலைப்பாடு.

டக்ளஸ் தேவானந்தா இன்னுமொரு முக்கிய விடயத்தை பகிரங்கமாக போட்டு உடைத்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளை வெற்றி கொண்ட பின்பு இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தமது யோசனையை ஜனாதிபதி வெளியிடுவார் என்பதே அது.

இப்பொழுது அதைப்பற்றிக் கூற முடியாது ஆனால் அது பற்றி தாம் தெரிந்து வைத்திருப்பதாக டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசிய பிரதமர் டி.பி. விஜேதுங்க 134 மணித்தியாலங்கள் விவாதம் நடத்தி பதினெட்டு லட்சம் ரூபா செலவு செய்தும் சர்வகட்சி மாநாட்டினால் எதுவித பலனும் இல்லையென கூறியுள்ளார்.

சரியாக ஒரு வருடம் முடிந்தும் பாராளுமன்ற தெரிவுக்குழுவும் உருப்படியான எந்த ஆலோசனையையும் முன்வைக்கவில்லை. இது ஒரு பம்மாத்து என இன்னுமொரு கொழும்புத் தமிழ்க்கட்சித் தலைவர் வர்ணித்திருக்கிறார்.

சர்வகட்சி மாநாடு எதுவித தீர்வையும் முன்வைக்க முடியாமைக்கு காரணம் அதில் பெரும்பான்மை உறுப்பினரை அங்கத்தவராகக் கொண்ட ஐ.தே.க. அரசு எதுவித ஆலோசனையையும் முன்வைக்காததே என்று திடமாகக் கூறலாம்.

விடுதலைப் புலிகளை வெற்றி கொண்ட பின்பு இனப்பிரச்சினைக்கான தமது தீர்வை ஜனாதிபதி முன்வைப்பாரென்றால் ஏன் இந்த சர்வகட்சி மாநாடு? ஏன் இந்த பாராளுமன்றத் தெரிவுக்குழு?

பின்னர் வெளியிடப்போகும் தீர்வை ஏன் இப்பொழுது வெளியிட முடியாது? இதிலிருந்து ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ள எத்தனை போர்க்கெடு விதித்து வெற்றி காணாத ஸ்ரீலங்கா அரசும் இராணுவமும் இனியும் வெற்றி கொள்ள முடியாது. ஒருவேளை [illegible] நாட்டுத் தமிழர்களை அழிக்கலாம். இவை சாத்தியமில்லையென டக்ளஸ் தேவானந்தாவுக்கு உள்ளூரத் தெரியாமல் இருக்க முடியாது.

விடுதலைப் புலிகளை இவர்கள் எப்போ வெற்றி கொள்வது, இனப்பிரச்சினைத் தீர்வை எப்போ அறிவிப்பது என சிறுபிள்ளை கூட கேட்கும்.

முன்னையது முடியாதது. ஆகவே பின்னையதும் வெளிவராது. எனவே ஜனாதிபதியும் அரசும் இனப்பிரச்சினையைத் தீர்க்கப்போவதில்லை.

டக்ளஸ் தேவானந்தா இதையும் உணராமல் இருக்க முடியாது.

ஸ்ரீலங்காவின் சிங்களத் தலைவர்களை நம்பி ஏமாந்த தலைவர்கள் வரலாறு 1918 ஆம் ஆண்டிலிருந்தே உள்ளது. சுதந்திரத்துக்குப் பின்பும் பொன்னம்பலம், செல்வநாயகம், சுந்தரலிங்கம், அமிர்தலிங்கம் என நம்பி ஏமாந்தவர்களின் நீண்ட பட்டியல் ஒன்று உண்டு. டக்ளஸ் தேவானந்தாவும் அதில் சேர்ந்து கொள்வார் என்பது திண்ணம்.

இந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி பிரேமதாஸவின் எண்ணம் எது என்பதையும் குறிப்பிடவேண்டும். அதை அவரது அண்மைக்கால அரசியல் ஆலோசகர்களில் முக்கியமானவரான தயான் ஜயதிலகவின் எழுத்துக்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

ஏனெனில் தயான் ஜயதிலக ஜனாதிபதி பிரேமதாஸவின் கருத்துக்களையே இப்போது பிரதிபலிக்கிறார்.

விடுதலைப் புலிகளை நசுக்கி விட்டு 'ஜனநாயக நீரோட்டத்துக்கு' வந்தவர்களுடன் பேசியே இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பது அவரது கருத்து. கடந்தவாரம் கூட சண்டே ஒப்சேவரில் இவ்வாறு அவர் எழுதியுள்ளார்.

விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தி விட்டார்கள் என ஒரு பேச்சுக்கு எடுத்தாலும் கூட ஏனைய 'ஜனநாயக ஆயுதக் குழுக்கள்' ஆப்கானிஸ்தானின் முஜாகிதீன் குழுக்கள் போல தம்முள்ளே மோதிக் கொள்ளவே செய்வர். இப்பொழுதே அவர்களுக்குள் முரண்பாடு உள்ளது.

அதுவும் சிங்கள இனவாதத்துக்கு சாதகமாகவேமாறும் என்பது சகல சிங்களக் கட்சிகளுக்கும் தெரியும். இந்த சந்தர்ப்பத்தில் தமிழரின் விடுதலை உணர்வை அழித்து சில சலுகைப் பிச்சைகளை வழங்கி இனப்பிரச்சினையை தீர்த்துவிடலாம் என்பதே அவர்களது எதிர்பார்ப்பும் முடிவும் ஆகும்.

தமிழினத்தின் பரிதாப வரலாறு தன்னையே தன் கண்ணைக் குத்தியது போலானது என்றே தோன்றுகின்றது.

காலிமுக சத்தியாக்கிரகத்தில் தாக்கப்பட்ட பின்பு தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றம் சென்றபோது, நனைந்த வாத்துக்கள் எனக் கூறியவர் ஒரு தமிழரே.

தமிழனை வைத்தே தமிழனை அடிக்க சிங்கள இனம் தெரிந்து கொண்டிருக்கிறது ஆனால் தமிழர்களோ ஒரு ஏமாளி இனமாக இளிச்சவாயர்களாக இன்னும் இருக்கின்றனர்.

சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு துணைபோய் தமது தனிப்பட்ட விரோதங்களுக்காக தமிழின விடுதலைப் போராட்டத்தை முனைமழுங்கச் செய்யும் விடுதலைப் புலிகளை காட்டிக் கொடுக்க முனைபவர்கள், சிங்கள இனம் தமிழினத்துக்கு எந்த உரிமையையும் வழங்க முன்வராது என உணர வேண்டும். அவர்களை முன்வைத்த வட-கிழக்கு கோரிக்கை ஏகமனதாக நிராகரிக்கப்பட்டு விட்டது இதை தெளிவாகக் காட்டும்.

தமிழர் தமிழர்களுக்கெதிராக சிங்களவருடன் சேர்ந்து பேசுவது போலவோ செயற்படுவது போலவோ எந்தவொரு சிங்களக் கட்சியோ குழுவோ, தமிழர்களுடன் சேர்ந்து செயற்பட்டிருக்கின்றனரா அல்லது செயற்படுவார்களா என சிங்களவரோடு நிற்கும் தமிழர்கள் சிந்திக்கவேண்டும்.

அப்படிச் சிந்தித்து ஆராய்ந்தால் அவர்கள் இருக்க வேண்டிய இடம் தமிழின விடுதலைப் போராட்டம் என்பதை உணர்வார்கள்.

அப்படி ஒரு நிலை ஏற்படும்பொழுதான் தமிழினம் விடுதலை பெறும்.

டக்லஸ் தேவானந்தா கூறுவது போல் இனப்பிரச்சனைக்கான தீர்வு ஒன்று பற்றி ஜனாதிபதி தீர்மானம் எடுத்து விட்டாரென்றால் அதை ஏன் வெளியிடவில்லையென்ற கேள்வி வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் எழும்

எஸ். ஜி. எம்

## ஸ்ரீஜெயவர்த்தனபுர பேராசிரியர் மீது கொலை, சதி குற்றச்சாட்டுக்கள்!

ஐந்து முக்கிய பிரமுகர்களைக் கொலை செய்ய சதி செய்ததாகவும், அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு சதி செய்ததாகவும் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இவர் மீதான குற்றப் பத்திரிகை சட்டமா அதிபரினால் கடந்த திங்கட்கிழமை கொழும்பு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

கணிதத்துறை பேராசிரியரான இவர் ஒரு அதிதீவிர ஜே. வி. பி உறுப்பினர் எனவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## சேலத்தில் பஸ் தீப்பிடித்து 20 பேர் மரணம்

நேற்று முன்தினம் மாலை தமிழகம் சேலம் மாவட்டத்தில் புளியம்பட்டி என்ற இடத்தில் பேருந்து ஒன்று தீப்பற்றியதில் 20 பேர் கொல்லப்பட்டார்கள். 40 பேர் கடுமையான எரிகாயத்துக்கு உள்ளானார்கள்.

இந்த பஸ் வண்டி பாலமொன்றுடன் மோதிய போது டீசல் தாங்கி சேதமடைந்து தீ பிடித்தது.

கொல்லப்பட்டோரில் 16 பேர் பயணிகள். நால்வர் பாதசாரிகள்.

## இலங்கையருக்குள்ள ஒரே திறமை இது என்கிறார் அமைச்சர்

இலங்கை மக்களுக்கு உள்ள ஒரேதிறமை பற்றித் தகவல் துறை அமைச்சர் ரணசிங்க நேற்று வாதுவையில் கூட்டமொன்றில் பிரஸ்தாபித்தார்.

'கூச்சலிடுவதே இலங்கை மக்களுக்கு உள்ள அந்தத் திறமை' எனசுவாரஷ்யமாகக் குறிப்பிட்ட அமைச்சர் அத்துடன் நின்று விடாது 'அடுத்த ஒலிம்பிக்கில் கூச்சலிடும் போட்டி இடம்பெற்றால் நிச்சயமாக இலங்கை தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைத் தட்டிக்கொண்டு விடும்' என்றும் அங்கு கூறினார்.

## யாழ். செல்லத் தயாராகுமாறு அரச ஊழியர்க்கு உத்தரவாம்

யாழ்ப்பாணத்தில் கைப்பற்றப்படும் பகுதிகளில் சிவில் நிர்வாகப் பணிகளை மேற்கொள்வதற்காக பதவி நிலை உத்தியோகத்தர்களையும், ஏனைய ஊழியர்களையும் அழைக்கும் போது சேவைக்குச் செல்வதற்கு எந்நேரத்திலும் தயாராக இருக்குமாறு அரச உயர் மட்டத்திலிருந்து வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாம்

நேற்று வெளியான கொழும்புப் பத்திரிகையொன்று இச் செய்தியை பிரசுரித்துள்ளது.

## ஒருகோடி80இலட்சம் புத்தகங்கள் அடுத்தவருடத்திற்கென அச்சாகும்

அடுத்த ஆண்டு இலவசப் புத்தகங்களுக்கென 45 கோடி ரூபாவை அரசு செலவிடவுள்ளது.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் 188 தலைப்புக்களின் கீழ் சுமார் ஒரு கோடியே 80 இலட்சம் பாடப் புத்தகங்கள் அச்சிடப்படவுள்ளன.

43 லட்சம் மாணவர்களுக்கு இவை விநியோகிக்கப்படவுள்ளன.

## ★ உதவி அரச அதிபர் அலுவலகம் மருதங்கேணியில் இயங்க அரச அதிபருக்கு மகஜர்

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு அலுவலகத்தை மீண்டும் மருதங்கேணியில் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி வடமராட்சி கிழக்கில் உள்ள பொது ஸ்தாபனங்கள் யாழ் அரசாங்க அதிபருக்கு மகஜர் அனுப்பியுள்ளன.

மருதங்கேணியில் இயங்கி வந்த மேற்படி அலுவலகம் ஆனையிறவு இராணுவ நடவடிக்கை காரணமாக சென்ற வருடம் முதல் தற்காலிகமாக அம்பன் விவசாய விஸ்தரிப்பு நிலையக்கட்டடத்தில் இயங்கி வருகின்றது

மேலும் தற்போதைய சூழ்நிலையில் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் சனத்தொகையில் சுமார் எண்பது வீதத்தினர் மருதங்கேணியை அண்டியுள்ள கிராமங்களிலேயே வசித்து வருகின்றனர்

இவர்கள் போக்குவரத்து கஷ்டத்தின் மத்தியில் அம்பனுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

எனவே மேற்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவு அலுவலகத்தை மீண்டும் மருதங்கேணியில் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வடமராட்சி கிழக்கு பொது ஸ்தாபனங்கள் அரச அதிபரைக் கேட்டுள்ளன. 24

### கடற்றொழில் பாதிப்பு

மண்டைதீவில் இருந்து இராணுவத்தினர் கரையோரப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை மேற்கொண்டு வருவதால் பாஷையூர், கொழும்புத்துறை குருநகர் போன்ற கரையோர பகுதி மீனவர்களின் மீன்பிடி தொழிலும் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. 47

## ★ 81 தடவைகள் கூடிய சர்வகட்சி மகாநாட்டினால்
## செலவு- $18\frac{1}{2}$ லட்சம்ரூபா; பலன் - ஏதுமில்லை!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்ட சர்வகட்சி மகாநாட்டினால் அரசுக்கு வீண் செலவு ஏற்பட்டதே தவிர நாட்டுக்குப் பலன் ஏதும் ஏற்படவில்லை என பிரதமர் டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார்

சர்வகட்சி மகாநாடு அமைக்கப்பட்ட நாள் முதல் 81 தடவை கூடி $134\frac{1}{2}$ மணி நேரம் ஆலோசனை செய்துள்ளது.

இவ்வளவு நேரம் கூட்டம் நடத்தப்பட்டதற்கு ஏற்பட்ட முழுச்செலவு 18 லட்சத்து 40 ஆயிரம் ரூபா ஆனால் இந்த சர்வகட்சி மகாநாட்டினால் எந்தவித பலனும் நாட்டுக்கு ஏற்படவில்லை எனவும் பிரதமர் கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

### ஊக்குவிப்பு வழங்க நடவடிக்கை

1988 தொடக்கம் 1989 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை இதுவரை பெறாத யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கும் கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கும் உரிய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை உடன் வழங்குவதற்குரிய கட்டுநிதி யாழ். கல்வித்திணைக்களத்தினால் சகல கோட்டக் கல்விக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. 12

### ஒப்பந்த மீறலே

நேற்று முன்தினம் யாழ் நகரை நோக்கி படையினர் நடத்திய தாக்குதல் ஓர் ஒப்பந்த மீறலே என சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ் வதிவிடப் பிரதிநிதி [illegible] ஒப்புக்கொண்டுள்ளார்

பொலிஸில்...

புகார் செய்த பின்பும் இந்த தாக்குதல் குழு அவரது இல்லத்துக்கு சென்று ஜனாதிபதி பிரேமதாசவை அவமதிக்கும் வகையில் சித்திரமாக வரையக்கூடாதென கொலை பயமுறுத்தல் விடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது

நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் காயமடைந்த நிலையிலும் ஹிவ்றி யூனூஸ் கலந்து கொண்டார்

கண் ஆஸ்பத்திரியில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் செய்தியாளர்களின் எழுத்து சுதந்திரம் பற்றிய சுலோகங்கள் எழுப்பப்பட்டன.

இரணைதீவு...

வனமும் வழங்கியுள்ளன. இலங்கை செஞ்சிலுவைச்சங்க பூநகரி பிரிவினர் இடம்பெயர்ந்த இக்கிராம மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர். 31

கொப்பேகடுவ...

தாக்கப்படும் நடவடிக்கை ஆரம்பமாகியது எனக்கூறினார்

அந்த பத்திரிகையின் கேலிச்சித்திரக்காரரான ஜிவ்றி யூனூஸ் கத்தியால் குத்தி காயப்படுத்தப்பட்டது இன்றைய அரசுசெய்தித்துறையை அடக்குவதற்கு வேறு வழிகளை கையாள்வதைக் காட்டுகின்றது என்றும் மேலும் அவர் கூறினார்.

500க்கும் மேற்பட்ட...

திரிகையின் கேலிச்சித்திர ஓவியர் ஆயுதபாணிகளால் தாக்கப் பட்டதை கண்டித்தே நேற்று இந்த போராட்டம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டது தெரிந்ததே

## பரீட்சை முடிந்த பின்பு விடைத்தாள்கள் செல்லு[ம்]

க. பொ. த உயர்தர பரீட்சை எதுவித தடையுமின்றி இம்மாதம் 25ஆம் திகதி வரை யாழ் மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெறும் என யாழ் கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இப்பரீட்சை முழுமையடைந்த பின்பு தான் சகல பாடங்களுக்குமுரிய விடைத்தாள்களும் கொழும்பி[ற்கு] அனுப்பிவைக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தா[ர்]. 47

## சிங்கள மொழி பிரசுரங்களை சிங்கப்பூர் அரசு வெளியிடும்!

சிங்கப்பூரில் நுளம்பினால் பரப்பப்படும் நோய்களைக் கட்டுப்படுத்தும் பணியில் வெளிநாட்டு மொழி பேசுவோரை அரசு நியமித்து வருகிறது.

நுளம்புகள் பெருகும் இடங்களை சோதிப்பதற்காக பரிசோதகர்கள் செல்லும்போது பல்வேறு இடங்களில் தாய்லாந்து சிங்கள மொழிகளில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

நுளம்புகளினால் பரப்பப்படும் நோய்களின் ஆபத்து பற்றி வெளிநாட்டு ஊழியர்களுக்கு அறிவுறுத்தவே இந் நடவடிக்கை.

பெரும்பாலும் கட்டிட வேலைகள் நடைபெறும் இடங்களிலேயே நுளம்புகள் காணப்படுகின்றன

சிங்கப்பூரில் கட்டிடத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில் பெரும் பாலானோர் தாய்லாந்து, இலங்கை நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## செயலக ஓய்வூதிய பகுதிக்கு தனிச்சிங்களத்தில் கடிதங்கள்

யாழ். செயலக ஓய்வூதிய திணைக்களத்துக்கு கொழும்பில் உள்ள அதன் தலைமையகத்தில் இருந்து தனிச்சிங்களத்திலேயே கடிதங்கள் தொடர்ந்தும் அனுப்பப்படுகின்றன.

இதனால் அவற்றை மொழிபெயர்த்து நடவடிக்கையெடுக்க செயலக ஓய்வூதியப்பகுதி ஊழியர்கள் பெரும் சிரமப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 4

## ஐ. நா. தடையால் லிபியாவி[ல்] நூறுக்கும் மேற்பட்டோர் மரண[ம்]

ஐக்கிய நாடுகள் சபையின் தடையை அடுத்து போதிய மருந்து கிடைக்காமையினால் லிபியாவில் நூறுக்கு மேற்பட்டோர் மரணமாகியுள்ளதாக லிபிய பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

பலியானோரில் பெருமளவானோர் பெண்களும் சிறுவர்களுமாவர் மேலும் 150 பேர் வரையில் இங்கு ஐ நா தடைகாரணமாக இறக்கும் தறுவாயிலுள்ளதாகம் பத்திரிகை கூறுகிறது

இதேவேளை கடந்த ஏ[illegible] மாதம் 15 ஆம் திகதி முதல் அமுலில் உள்ள பொருளாதாரத்தடையால் இதுவரை லிபியாவுக்கு 12,000 [illegible] ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது

## பல்கலைக்கழக அனுமதிக்கு புதிய திட்டம் வரும்

இவ்வருட பல்கலைக்கழக அனுமதிக்கான புதிய திட்டமொன்று வகுக்கப்பட்டு வருவதாக உயர்கல்வி அமைச்சர் ஏ சி எஸ் ஹமீத் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

எவருமே பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்படாவகையில் இத்திட்டம் அமையுமெனவும் அவர் தெரிவித்தார்.

### உதவிப் பணம் வழங்கப்படுகிறது

மே, ஜூன் மாதங்களுக்கான வறுமை நிவாரண மாதாந்த உதவிப் பணம் வல்வெட்டித்துறைப் பகுதியில் வழங்கப்பட்டுவருகிறது.

இவ் உதவிப் பணம் இம்முறை வல்வெட்டித்துறை தபால் நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டுவருகிறது. 10

### யாழ். அதிபருக்கும் அழைப்பு

கொழும்பில் மாதாந்தம் நடைபெறும் அத்தியாவசிய சேவைகள் மகாநாட்டிற்கு யாழ் அரசாங்க அதிபரும் அழைக்கப்படவேண்டும் என மகாநாட்டில் பங்கு பற்றும் பிரமுகர்கள் அரசைக் கோரியுள்ளனர்.

தற்போது யாழ் மாவட்டத்தில் நிலவும் பிரச்சினைகள் பற்றி அறியவும் அங்கு தேவையாகவுள்ள அத்தியாவசிய சேவைகள் பற்றி ஆலோசிக்கவும் யாழ் அரச அதிபரின் பிரசன்னம் முக்கியமானதென கருதப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 4

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால டச்சு வீதி கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 20-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.